21st July 1964]

விடாமல் செய்வதும்தான் இதன் நோக்கமாகும். மதுரை மாவட்டத்திலுள்ள ஓர் உற்பத்தியாளரிடமிருந்து 30 மூட்டை நெல் மட்டுமே கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. மாநில அரசாங்கத்தின் முறையீட்டின் மேல், இந்திய அரசாங்கம் 23-3-1964-லிருந்து அரிசிக் கொள்முதல் விலையை மணங்கு ஒன்றுக்கு 2 ரூபாய் அல்லது குவின்டால் ஒன்றுக்கு ரூ. 5.36-ஆக உயர்த்தியுள்ளது. 27-6-1964 முதல் இந்தக் கொள்முதல் திட்டம் ரத்து செய்யப்பட்டுவிட்டது.

*590 கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா: கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1963-64-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் முடிய எத்தனை டன் அரிசி கொள்முதல் செய்யப்பட்டது?

(இ) வியாபாரிகள் மூலம் எத்தனை டன்? கூட்டுறவு சங்கங்கள் மூலம் எத்தனை டன்?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார்:

(அ) 1963-ல் நிர்பந்தமற்ற அரிசிக் கொள்முதல் செய்யும் திட்டம் நமது மாநிலத்தில் அமலில் இருந்தது. இந்தத் திட்டத்திற்குப் பதிலாக, 8-1-1964 முதல் சட்டபூர்வமான கொள்முதல் திட்டம் அமலுக்கு வந்தது. 7-1-1964 வரையில் நிர்பந்தமற்ற கொள்முதல் திட்டத்தின்கீழ், மொத்தம் 50,800 டன் கொள்முதல் செய்யப்பட்டது. 8-1-1964 முதல் 29-2-1964 வரையில் சட்ட பூர்வமான கொள்முதல் திட்டப்படி 18,337 டன் கொள்முதல் செய்யப்பட்டது.

(இ) வியாபாரிகளிடமிருந்து கொள்முதல் செய்தது எவ்வளவு கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து கொள்முதல் செய்தது எவ்வளவு என்பதற்கு உடனடியாகத் தகவல் ஏதும் இல்லை.

திரு. கே. ஏ. மதியழகன்: கனம் அமைச்சர் அவர்கள், விவசாயிகள் ஒரு நியாய விலை பெறுவதற்கும், வியாபாரிகள் அதிகமான அளவில் விலையை உயர்த்தி விடாமல் இருப்பதற்கும் கொள்முதல் திட்டம் மேற்கொள்ளப்பட்டது என்று சொன்னார்கள். அந்தக் கொள்கையில் சர்க்கார் எந்த அளவுக்கு வெற்றியடைந்திருக்கிறார்கள் என்பதை அமைச்சர் அவர்கள் விளக்கிச் சொல்வார்களா?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார்: லட்சம் டன் கொள்முதல் செய்யவேண்டுமென்று திட்டமிட்டதில் 71,000 டன் வரை கொள்முதல் செய்திருக்கிறோம்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: கொள்முதல் திட்டம் கட்டாயமாக இருந்தாலும் சரி, நிர்ப்பந்தம் இல்லாமல் இருந்தாலும் சரி திட்டம் இப்போது அடியோடு கைவிடப்பட்டது. விவசாயிகளுக்கு நியாய விலை கிடைக்கவும், அரிசி நியாயமான விலைக்கு விற்கப்பட வேண்டுமென்றும் திட்டமிடப்பட்ட அந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு மேற்கொள்ளப்பட்ட மாற்று நடவடிக்கைகள் என்ன?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் : இந்த யோசனையை எல்லாம் வைத்துத்தான் மத்திய அரசாங்க உணவு அமைச்சர் அவர்கள் கூட்டிய சதர்ன் ஸோன் கூட்டத்தில் யோசனைகள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. இதிலே எடுக்கப்பட்ட முடிவைப் பற்றிய பதிலை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிருேம்.

திரு. கே. ஏ. மதியழகன் : அமைச்சர் அவர்களுடைய அறிக்கையில் '27–6–1964-ல் இருந்து கொள்முதல் செய்வது நிறுத்தப்பட்டது ; அரிசி விலையைக் குறைக்கும் நடவடிக்கைகளை மத்திய அரசாங்கம் மேற்கொண்டுள்ளது' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அப்படியானுல் கொள்முதல் வேலையினுல் விலைவாசி குறையமுடியாது ; அந்தத் திட்டம் தோற்றுவிட்டது என்று மத்திய சர்க்கார் முடிவுக்கு வந்து விட்டார்களா என்று அறிய விரும்புகிறேன்.

(பதில் இல்லை.)

திரு. இராம. அரங்கண்ணல் : கொள்முதல் விஷயத்தில் அவர்களாகக்கொடுப்பது, நாம் வலியுறுத்திப் பெறுவது என்கிற முறைகளில் எல்லாம் போதுமான அளவுக்குக் கொள்முதலைப் பெற முடியவில்லை என்ற நிலைமை இருந்து வருகிறது. ஆகவே அதிகமான உற்பத்தி செய்து அதிகமான மூட்டைகளை யார் தருகிருர்களோ அவர்களுக்கு அதிகப்பணம் கொடுக்கிற வகையில், மூட்டைக்கு இரண்டு ரூபாய் என்ற வகையில் முன்பு இருந்த கூப்பன் முறையைக் கொண்டு வர அரசாங்கம் முன் வருமா ?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் : விலை நிர்ணயத்தைப் பற்றி முடிவு செய்யும்போது இந்தப் பிரச்சினை யோசிக்கப்படும்.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கொள்முதல் போன்ற பிரச்சினைகள் எல்லாம் மத்திய உணவு அமைச்சருடைய பரிசிலனையில் இருந்து வருவதாகத் தெரிவித்தார்கள். அந்த முடிவுகள் எப்போது வெளிவரும் ? எப்போது நடைமுறைக்குக் கொண்டு வரப்படும் ?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் : கூடிய சீக்கிரம் அந்தத் தகவலை மத்திய அரசாங்கத்திலிருந்து வெளியிடுவார்கள்.

திரு. ஜே. மாதா கவுடர் : அரிசி மில்களைச் சர்க்காரே எடுத்து நடத்தவேண்டுமென்பதைப் பற்றி தென் மண்டல உணவு அமைச்சர்கள் கூட்டத்தில் யோசித்தார்களா ?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் : அந்த விவரங்களையெல்லாம் இப்போது சொல்லத் தயாராக இல்லை.

திரு. டி. கார்ச்சா கவுடர் : ராஜ்யத்தில் 700-க்கு மேற்பட்ட நியாய விலைக் கடைகள் இருக்கின்றன. கொள்முதல் செய்வது கைவிடப்பட்டதால் அந்தக் கடைகளுக்கு அரிசி சப்ளை செய்ய மாற்று ஏற்பாடுகள் என்ன மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன ?

21st July 1964]

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் : நியாய விலைக் கடைகளுக்குத் தேவையான அரிசியை மத்திய சர்க்கார் ஸ்டோரிலிருந்து சப்ளை செய்கிருர்கள்.

திரு. ஆ. கு. சுப்பையா : தஞ்சை மாவட்டத்தில் 1963-64 முடிய எத்தனை லட்சம் டன் அரிசி கொள்முதல் செய்யலாம் என்று உத்தேசிக்கப்பட்டது ? எத்தனை லட்சம் டன் கொள் முதல் செய்யப்பட்டது ?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் : அந்தத் தகவல் இல்லை.

திரு. இராம. அரங்கண்ணல் : அரிசியின் மாதிரிகள் சட்டப் பேரவை நூலகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. சிதம்பரத்திலிருந்து வந்திருக்கிற அரிசியைப் பார்த்தால் கல்லும் அரிசியும் கலந்ததாக இருக்கிறது. இங்கு வந்திருக்கும் அரிசியே இப்படி இருக்கிறது என்ருல் விற்கப்படுகிற அரிசி எப்படியிருக்கும் ? அமைச்சர் அவர்கள் அதை பார்வையிட்டார்களா ?

கனம் சபாநாயகர் : அரிசியை மட்டும் பாருங்கள், கல்லை ஏன் பார்க்கிறீர்கள் ?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் : வந்திருக்கும் அரிசியை சாம்பிளுக்கு வைத்திருக்கிருேம். அதை பார்த்திருக்கிறீர்கள். அதைச் சமைத்துச் சாப்பிட்டால் நன்ருயிருக்கும்.

திரு. மு. சண்முகம் : அரசாங்கம் நெல் கொள்முதல் செய்வதில் நியாயவிலை என்று அரசாங்கம் நிர்ணயிப்பது எந்த ஆதாரத்தில் செய்யப்படுகிறது? உற்பத்தி செய்யும் விவசாயிகளின் கருத்தைக் கொண்டா ?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் : ஓரளவிற்கு உற்பத்தி செய்யக் கூடியவர்களைப் பாதிக்காமல் இருக்க வேண்டும் என்பதை மனதில் வைத்துத்தான் செய்வார்கள்.

திரு. கே. ஏ. மதியழகன் : புவனேஸ்வரத்தில் நம் முன்னுள் முதல் அமைச்சர் திரு. காமராஜ் அவர்கள் தலைமையில் நடந்த மகா நாட்டில் விலைவாசியைக் குறைப்பதற்கு ஒரு அம்சமாக அரிசி ஆலைகளை தேசியமயமாக்குவது என்று வலியுறுத்தி பேசப்பட்டு ஒரு முடிவு செய்யப்பட்டது. ஆனல் இன்று இந்த சர்க்கார் அதில் தயக்கமும், தடுமாற்றமும் காட்டுகிறது. அரிசி ஆலைகளை தேசியமயமாக்குவதில் இந்த சர்க்காரின் திட்டவட்டமான கொள்கை என்னவென்று அமைச்சர் அவர்கள் கூறுவார்களா ?

MR. SPEAKER : This does not come under this question It is a policy matter.